# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2041 (ஐப்பசி–கார்த்திகை) நவம்பர் 2010 ஏர்-25, உழவு-11, விலை ரூ.10.00



ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744


## கொங்கு நண்பர்கள் சங்கம்

| | |
|---|---|
| "வெள்ளி விழா இல்லம்"<br>34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014.<br>Ph : 28351244<br>28352744 | "கொங்கு நாடு இல்லம்"<br>27, அம்மையப்பன் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014<br>Ph : 28350432 /<br>Fax : 044-28351244 |

| | |
|---|---|
| தலைவர் | : பரணி கே.பாலசுப்பிரமணி |
| துணைத்தலைவர்கள் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : ஆர். செல்வராஜ் |
| இணைச்செயலாளர்கள் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>Dr.கே.ஆர்.பி.சண்முகம் |
| பொருளாளர் | : கே.கே. ரமேஷ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

<u>செயற்குழு உறுப்பினர்கள் :</u>

| | |
|---|---|
| கே.ஏ.கணபதி | வி.பி.வீரப்பன் |
| கே.ராஜாமணி | ஆர்.இளங்கோ |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.ரவி |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | பி.அருள் |
| ஆர். சண்முகவேல் | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| எம். கார்த்திக் | எம்.அமராபதி |

## இந்த இதழில்


| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| செயலாளர் அறிக்கை | - | 3 |
| சங்கப் பொறுப்பாளர்கள் | - | 4 |
| முதல்வருடன் சந்திப்பு | - | 13 |
| வாழ்த்துகிறோம் | - | 14 |
| பொதுக்குழுக் கூட்டம் | - | 15 |
| வாழ்த்துச்செய்திகள் | - | 19 |
| நன்றி | - | 21 |
| வாழ்த்துகிறோம் | - | 22 |
| மணமகன் தேவை | - | 24 |
| கவிதை | - | 25 |
| திருமண தகவல் மையம் | - | 26 |
| மணமகள் தேவை | - | 27 |
| மணமகன் தேவை | - | 29 |


### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே ! வணக்கம்.



புதிய செயற்குழு பொறுப்பேற்ற பின்னர்நடந்த முதல் செயற்குழுக் கூட்டத்தில், சங்கப் பணிகளை இன்னும் சிறப்பாக ஆற்ற வேண்டும் என்றும், சங்கத்தின் நிதிநிலையை மிக நல்ல நிலைக்குக் கொண்டு சென்று, சமுதாய மக்களுக்கு பல்வேறு வகையிலும் உதவ வேண்டும் என்றும், அதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து பணியாற்றுவோம் என்றும் அனைத்து நிர்வாகிகளும் ஒருமனதாகக் கூறியது மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

இந்த மகிழ்ச்சியோடு, இரண்டு முக்கியச் செய்திகளைப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். ஒன்று, 29–10–2010 அன்று தீரன் சின்னமலை மாளிகை, சங்கத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுவிட்டது என்ற மகிழ்ச்சியான செய்தி. கொங்கு நாடு அறக்கட்டளைக்குத் தரவேண்டிய மீதித்தொகை ரூ. 37,10,000/– சங்க நிர்வாகிகளிடம் வட்டியில்லாக் கடனாகப் பெற்று அடைக்கப்பட்டுவிட்டது. சென்ற பொதுக்குழுவில் பேசிய பலரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இதைச் செய்து முடிக்க உதவிய செயலாளர், துணைத்தலைவர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் ஒத்துழைத்த அனைத்து நிர்வாகிகளுக்கும் சங்கத்தின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது, 13–10–2010 அன்று 27 சமுதாய சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் தமிழக முல்வரை, சந்தித்தபோது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் சார்பாக நான் கலந்துகொண்டேன் என்பதாகும். ஜாதிவாரி கணக்கெடுப்பை உடனே நடத்த வேண்டும் என்ற கோரிக்கை மனு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

எனக்கு முதல்வரிசையில் அமர இடம் கொடுத்து, மற்றவர்களைக்காட்டிலும் எனது கருத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது தற்போது தமிழக அரசும், மற்றவர்களும் கொங்குவேளாளர் சமுதாயத்தின் மேல் கொண்டுள்ள மரியாதையை நானும், மற்றவர்களும் உணர்ந்து கொள்ள வாய்ப்பாக இருந்தது. நமது சங்கத்திற்குக் கிடைத்த இந்த கௌரமும், அங்கீகாரமும் நமக்கெல்லாம் பெருமை அளிக்கிறது. இதற்கு முக்கியக்காரணம், சென்ற பாராளுமன்றத்தேர்தலில் கொங்கு இன மக்கள் ஒற்றுமையாக, இன உணர்ச்சியுடன் கொடுத்த ஆதரவால் கொங்கு நாடு முன்னேற்றக்கழகம் வாங்கிய ஏழு இலட்சம் ஓட்டுக்காள்தான். சமுதாய ஒற்றுமையும், வலிமையும் கொண்டு எதையும் நம்மால் சாதிக்கமுடியும் என்பது தெளிவாகிறது.

69 சதவிகிதம் இட ஒதுக்கீட்டைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதும் கொங்குச் சமுதாயத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதும், நமது நிலைப்பாடு. நம்முடைய சமுதாய ஒற்றுமை இதைச் சாத்தியமாக்கும் என்பது நிச்சயம்.

நன்றி !

பரணி கே.பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

# செயலாளர் அறிக்கை

அன்புநிறைந்த கொங்கு சொந்தங்களே !



வணக்கம். 26–09–2010 அன்று நடந்த பொதுக்குழுக் கூட்டத்தில் பேசிய சங்கத்தின் தலைவர் திரு. பரணி பாலு, துணைத்தலைவர் திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்கள், தீரன் சின்னமலை மாளிகைக்காக கொங்கு நாடு அறக்கட்டளை தரவேண்டிய மீதித் தொகை ரூ. 35 இலட்சத்தை வட்டியோடு, இன்னும் இரண்டு மாதங்களுக்குள் கொடுத்துவிடுவோம் என்று உறுதி கூறியதோடு, நம்முடைய புதிய புதிய செயற்குழு அதைச் செய்து முடிக்கும் என்றும் கூறினார்கள்.

சங்கத் தலைவர் திரு.பரணி பாலு மற்றும் பொருளாளர் திரு.கே.கே.இரமேஷ் அவர்கள் எடுத்த முயற்சிகளின் விளைவாக நிதி கடனாகத் திரட்டப்பட்டு, கொங்கு நாடு அறக்கட்டளைக்கு முழு பணமும் வட்டியோடு ரூ. 37,10,000/– கொடுக்கப்பட்டுவிட்டது என்பதை சங்கத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக கேட்ட உடன் தயக்கமின்றி உடனடியாக உதவிய கீழ்க்காணும் பெருந்தகைகளுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். துணைத்தலைவர் திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் ரூ.20,00,000/– அசோஷியேஷன் ஆப் என்டர்பிரைசிங்க எலைட் ரூ. 13,00,000/– பொருளாளர் திரு.கே.கே.இரமேஷ் ரூ. 10,00,000/– தலைவர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி ரூ. 7,00,000/– திரு.வி.பி.செங்கோட்டுவேல் ரூ. 2,00,000/– திரு.கே.ஏ.கணபதி ரூ. 1,00,000/– திரு.வி.பி.வீரப்பன் ரூ.1,00,000/– திரு.எஸ்.ஆர்.ராஜேந்திரன் ரூ.50,000/– திரு.கே.ராஜாமணி ரூ. 50,000/– திரு.அமராபதி ரூ. 50,000/– திரு.வீ.ஆர்.பாலசுப்பிரமணி ரூ. 25,000/– திரு.என்.பி.இசையழகன் ரூ.25,000/–

கொங்கு நாடு அறக்கட்டளை தலைவர் அருட்செல்வர் அவர்களுக்கும் மற்ற நிர்வாகிகளுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 29–10–2010 அன்று தீரன் சின்னமலை மாளிகை சங்கத்தின் பேரில் பதிவு செய்யப்பட்டுவிட்டது என்ற நற்செய்தியைத் தெரிவித்துக்கொள்வதோடு, விரைவில் தீரன்சின்னமலை கொங்கு நண்பர்களின் பயன்பாடுகளுக்கு வரும் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தீரன் சின்னமலை மாளிகைக்காக நிதி கொடுத்த அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவிப்பதோடு, நன்கொடை இதுவரை அனுப்பாதவர்கள் விரைந்து அனுப்பும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி !

ஆர். செல்வராஜ்
செயலாளர்

❖❖❖❖❖

# சங்கப் பொறுப்பாளர்கள் 2010-2012

திரு.**பரணி கே.பாலசுப்பிரமணி** (தலைவர்)



கரூர் மாவட்டம் புகலூர் (TNPL) காகித ஆலை அருகில் உள்ள நடையனூரில் பிறந்தவர். மணியன் கூட்டத்தைச் சேர்ந்த இவரது குலதெய்வம் மோகனூர் நவலடியான் ஆகும். கட்டிடப் பொறியாளரான இவர் சென்னையில் பரணி பில்டர்ஸ் என்ற நிறுவனத்தைத் தொடங்கி அண்ணா நகர் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் உயர்தர அடுக்குமாடி குடியிருப்புகள் பலவற்றை உருவாக்கி உள்ளார். அபரித செயலாற்றலும், சேவை மனப்பான்மையும் கொண்டுள்ள இவர் வெள்ளி விழா இல்லத்தைக் கட்டி முடிக்கும் பொறுப்பையேற்று, சிறப்பாக உருவாக்கித் தந்தார். 2 ஆண்டுகள் பொருளாளராகவும், கடந்த 4 ஆண்டுகளாக செயலாளராகவும் மிகச்சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். தீரன் சின்னமலை மாளிகை உருவாக்கத்தில் மிக முக்கியப்பங்கு வகித்தவர். இம்மாளிகையைச் சிறப்பாகக் கட்டி முடித்ததற்காகப் பலராலும் பாராட்டப்பட்டவர். ஆர்ப்பாட்டம் இன்றி, அமைதியாக தன் இனிய அணுகுமுறையாலும், அயரா உழைப்பாலும் சங்கப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருபவர். இவரது மனைவி ஜெயா சமுதாயப்பணிகளில் கணவருக்கு துணை நிற்பவர். இத்தம்பதியருக்கு இரண்டு மகன்கள் சந்திப், பிரதிப். இருவரும் பள்ளியில் படித்து வருகின்றனர். இளம் வயதில், 50 ஆண்டுகள் கடந்துள்ள சங்கத்தின் தலைவராகத் தற்போது பொறுப்பேற்றுச் சாதனை படைத்துள்ளார், பரணி பாலசுப்பிரமணி அவர்கள்.

திரு. **ஈ.ஆர். ஈஸ்வரன்** (துணைத் தலைவர்)




நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டிற்கு அருகில் உள்ள கொக்கராயன் பேட்டையில் பிறந்தவர். சாத்தந்தை கூட்டத்தைச் சார்ந்தவர். பொறியியல் பட்டதாரியான இவர் கட்டிடம் கட்டுதல் மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதி தொழில்களில் சென்னையில் ஈடுபட்டுள்ளார். இவருக்கு இரண்டு மகள்கள். மூத்த மகள் ஆர்த்தி, Pure Chemicals நிறுவனத்தலைவர் மற்றும் சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்களின் மகன் திரு.எம்.பி.இலட்சுமிபதி அவர்களை மணந்துள்ளார். இளைய மகள் அனு பள்ளியில் படிக்கிறார். மனைவி நளினி சமூக சேவகி. வெள்ளிவிழா கட்டிடம் மற்றும் தீரன் சின்னமலைமாளிகை உருவாக்கிடப் பெரும் பங்காற்றியவர். தன் உணர்ச்சிமிக்க பேச்சால் சமுதாய மக்களை விழிப்புணர்ச்சி அடையச் செய்தவர். Chamber of Indo-

American, Chamber of Indo-Japan, ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஆகியவற்றில் உறுப்பினராக உள்ளார். நான்கு ஆண்டுகளாகச் செயலாளராகவும், 6 ஆண்டுகள் துணைத்தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர். கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவை பொதுச்செயலாளராகப் பணியாற்றி பேரவைக்குப் புத்துயிர் ஊட்டியவர். ஓய்வறியா உழைப்பாளி.

கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்று, கொங்குச் சமுதாயம் அரசியல் அங்கீகாரம் பெறுவதற்கும், அதன் மூலம் சமுதாய உரிமைகளைப் பெறுவதற்கும் பாடுபட்டு வருகிறார். கோவையில் நடந்த மாபெரும் மாநாட்டின் சிறப்புக்கு முக்கியக் காரணகர்த்தா இவர். கொங்குச் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரம். தற்போது சங்கத்தின் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

திரு. **பி.சென்னியப்பன்** (துணைத் தலைவர்)



திரு. சென்னியப்பன் அவர்கள் கோவை மாவட்டம் சோமனூரைச் சேர்ந்தவர். இவரது கூட்டம் சேரன். சொந்த முயற்சியால் நூற்பு ஆலை, துணி தயாரிப்பு ஆகிய துறைகளில் முத்திரையைப் பதித்து, BRT Groups என்ற பெரிய ஆலமரத்தை உருவாக்கியுள்ளார். இவரது மனைவி திருமதி. சுப்புலட்சுமி. மகள் பானுராதா, மகன் குணசேகர் இருவரும் திருமணமானவர்கள். மகன் நூற்பாலையையும், காற்றாலை மின் தயாரிப்புப் பிரிவுகளையும் கவனித்துக்கொள்கிறார். செயற்கை இழை நூல் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதியாளர் சங்கம், கோவை காஸ்மோபாலிடன் கிளப், கோவை ஜென்னிஸ் கிளப் ஆகியவற்றில் உறுப்பினராக உள்ளார். தோற்றத்தில் எளிமை, செயல்பாடுகளில் வலிமை, தாராள குணம், சமூதாயப் பற்று ஆகிய குணங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர். இவர் சங்கத்திற்கு 200 உறுப்பினர்களை சேர்த்து ரூ.20,00,000/– சங்கத்திற்கு தொகை வர காரணமாக இருந்தார். செயற்குழு உறுப்பினராகவும், சங்கத்தின் துணைத்தலைவராகவும், அமரர் கே.ஆர்.பி.மோகன் அவர்கள் மறைவிற்குப் பிறகு தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றியவர். தற்போது துணைத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

திரு. **ஆர்.செல்வராஜ்** (பொருளாளர்)


இவர் சமுதாயப் பெரியவர், சங்கமுன்னோடி, முன்னாள் செயற்குழு உறுப்பினர் திரு.என்.ரவீந்திரன் அவர்களின் மூத்த புதல்வர். பொறியியல் பட்டதாரியான இவர் சென்னை பார்லக்ஸ் பெயிண்ட்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். இவருடைய மனைவி திருமதி கோமதி பொறியியல் பட்டதாரி. இவருக்கு ஒரு மகன், ஒரு மகள். மகள் சாத்வி லண்டனில் மேற்படிப்பு முடித்து, வேலையில் உள்ளார். மகன் தீரஜ் கல்லூரியில் படித்து வருகிறார். அம்பத்தூர் தொழிற்பேட்டையின் தலைவராகவும், அம்பத்தூர் தொழிற்பேட்டை



பொருட்காட்சியின் அமைப்பாளராகவும் சிறப்பாகச் செயலாற்றியவர். சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும், இணைச்செயலாளராகவும், பொருளாளராகவும் மிகச்சிறப்பாகப் பணியாற்றியவர். அம்பத்தூர் தொழிற்போட்டை (AIEMA) தலைவராக இந்த ஆண்டு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமை பெற்றவர். தீரன் சின்னமலை மாளிகை கட்டியதில் முக்கியப் பங்கு வகித்தவர். சங்கத்தின் கொங்கு சாதனையாளர் விருது பெற்றவர். திறமையும், செயலாற்றலும், அபரித சமுதாயப்பற்றும் கொண்டுள்ள இவர் தற்போது செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. **எஸ்.ஆர்.ராஜேந்திரன்** (இணைச் செயலாளர்)

கோவை மாவட்டம் மதுக்கரையில் **1957** ஆம் ஆண்டு பிறந்த இவர் செல்லன் கூட்டத்தைச் சேர்ந்தவர். சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் துணைத்திட்ட அமைப்பாளராகப் பணியாற்றுகிறார். 'Y' s Men International என்ற அமைப்பில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். கொங்குச் சமுதாய வளர்ச்சிப்பணிகளில் தீவிரப் பங்கேற்று அயராது உழைத்து வருபவர். **10** ஆண்டுகள் செயற்குழு உறுப்பினராகவும், **4** ஆண்டுகள் இணைச் செயலாளராகவும் மிகச்சிறப்பாகப் பணியாற்றி அனைவரின் பாராட்டுதலையும் பெற்றவர். குடும்ப விழா, விளையாட்டுவிழா ஆகியவற்றை பல ஆண்டுகளாக முன்னின்று நடத்தி வருகிறார். மனைவி பெயர் சாந்தி. மகன்கள் பிரிய நந்தன், சூரிய நந்தன். இருவரும் கல்லூரி மாணவர்கள். மீண்டும் இணைச்செயலாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.



திரு. **கே.ஆர்.பி.சண்முகம்** (இணைச் செயலாளர்)

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், குப்பாண்டாம்பாளையம் கிராமத்தில் உள்ள கரட்டூரில், ஓதாளங்குலத்தைச் சார்ந்த திரு.கே.ஆர்.பழனிச்சாமிக்கவுண்டர் – பழனியம்மாள் தம்பதியரின் மூத்த மகனாக **1951** ஆம்ஆண்டில் பிறந்தார். இவரது மனைவி எஸ்.வசந்தி B.A.,. டாக்டர் சண்முகம் தனது பள்ளிக் கல்வியை திருச்சிக்கு அருகிலுள்ள திருப்பராய்த்துறையில் ஸ்ரீஇராமகிருஷ்ண தபோவனம் என்ற பள்ளியில் படித்தார். கர்நாடகா மாநிலத்தில் உள்ள மனிப்பால் மருத்துவக் கல்லூரியில் MBBS., பட்டம் பெற்றார். **1986** ஆம் ஆண்டில் தன் சொந்த ஊரிலேயே கே.ஆர்.பி.மருத்துவமனையை என்ற மருத்துவமனை நடத்தி வருகிறார். இவருக்கு திருமதி.




எஸ்.பிரதீபா B.E., என்ற மகளும்,செல்வன் எஸ்.பிரனேஷ் B.Tech., என்ற மகனும் உள்ளனர். மகளின் கணவர் ஸ்ரீ ஹரி B.CA., MBA., இருவரும் பெங்களூரில் உள்ளனர். மகன் பிரனேஷ் B.Tech., முடித்துவிட்டு தற்போது UK வில் M.S. படித்துவருகிறார். இவருடைய இளைய சகோதரர் நமது மதிப்பிற்கும், பாசத்திற்கும் உரிய கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவராக இருந்த அமரர் கே.ஆர்.பி.மோகன் ஆவார். டாக்டர் சண்முகம் அவர்களும், மோகன் அவர்களும் இணைபிரியாமல் வாழ்ந்தவர்கள். தலைவர் பதவியில் இருந்த போது தன் அண்ணனின் மடியில் உயிர் நீத்தார். டாக்டர் சண்முகம் இணைச் செயளாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

திரு. **கே.கே.ரமேஷ்** (பொருளாளர்)



இவரது சொந்த ஊர் ஈரோடு மாவட்டம் கோம்புப்பாளையம் ஆகும். காலமங்கலம் குலவிளக்கம்மன் இவரது குலதெய்வம். கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்தவர். இவர் ஈரோடு அரிமா கே.பி.கந்தசாமி குப்புலட்சுமியின் அருந்தவப் புதல்வர். இன்டஸ்டீரியல் புரடெக்ஷன் எஞ்சினியர். சிறுவயது முதலே தொழில் ஆர்வம். எதையும் பார்த்தவுடனே புதுமையாகச் செய்பவர். அருணா பம்ப்ஸ், கே.கே.ஆர்.மெட்டல் காம்போனென்ட்ஸ் ஆகிய தொற்சாலைகளைத் திறம்பட நடத்தி வருகிறார். சி.என்.சி. என்னும் நவீன தொழில்நுட்பத்தில் சிறந்த வல்லுநர். இவர் நமது முன்னாள் சங்கத்தலைவர் எஸ்.அருணாச்சலம் அவர்களின் மருமகன் ஆவார். இவரது மனைவி திருமதி ஆர்.காந்திமதி B.Com., மகள் லட்சணா, மகன் அன்வித்ரிஹி. இருவரும் டி.ஏ.வி பள்ளியில் படிக்கிறார்கள். கொடுமுடி, சிவகிரி எஸ்.எஸ்.பி. உயர் நிலைப்பள்ளி செயற்குழு உறுப்பினர். AIEMA உறுப்பினர். சங்கத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வேண்டியதைச் செய்பவர். செயற்குழு உறுப்பினராகத் திறம்படப் பணியற்றியவர். தற்போது பொருளாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## செயற்குழு உறுப்பினர்கள்




திரு. **கே.ஏ. கணபதி**

நாமக்கல் மாவட்டம் பேளுக்குறிச்சி அருகில் உள்ள வெள்ளாளப் பட்டியில் பிறந்தவர். விழியன் கூட்டத்தைச் சேர்ந்தவர். இவரது மனைவி திருமதி. கனகம். யுவராணி, தீபராணி என்ற இரண்டு மகள்கள். இருவரும் திருமணமானவர்கள். மகன் திரு. க.ஜோதிஷ் குமார், பொறியியல் பட்டம் பெற்று அமெரிக்காவில் M.S. உயர் கல்வி பயின்றவர். சென்னையிலும்,புதுச்சேரியிலும், தர்மபுரியிலும் தைரியலட்சுமி பாலிசாக்ஸ் பிரைவேட் லிமிடெட், அத்தியப்பா

கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட், ஸ்ரீ பிரிமியர் கெமிக்கல், எல்லாக் கெம் இண்டஸ்டிரிஸ் (இந்தியா) பி.லிமிடெட் போன்ற பல கெமிக்கல் ஆலைகளை நிறுவி, பார்மசூடிகல் கம்பெனிக்குத் தேவையான மூலப்பொருட்களை உற்பத்தி செய்து மிகச்சிறப்பான முறையில் நிர்வகித்து வருகிறார். பேரீயம் கார்பனேட் என்ற கெமிக்கல் உற்பத்தியி ல் இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளார். மகன் தொழிலில் தந்தைக்குத் துணை புரிகிறார். கொடையுள்ளம், தொலைநோக்குப்பார்வை, தன்னம்பிக்கை, சமுதாயப்பற்று ஆகியன கொண்டுள்ள இவர் சங்கத்திற்கு பலவகைகளில் நிதிஉதவி செய்தவர். திரு. கணபதி அவர்கள் ஐந்தாவது முறையாக செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.


திரு. **கே.ராஜாமணி**



சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே உள்ள வனவாசி என்னும் ஊரில் பிறந்த இவர் சாத்தந்தை கூட்டத்தைச் சேர்ந்தவர். இவரின் தந்தையார் திரு.கந்தசாமிக் கவுண்டர் தாம்பரத்தில் மிக்க செல்வாக்கு பெற்றிருந்தவர். சென்னையில் கனரக இயந்திரங்களைக் கொண்டு நில சம்பந்தப்பட்ட வேலைகள் மற்றும் கருங்கல் ஜல்லி, கிரஷ்ஷர் போன்ற தொழிற்சாலைகளை நடத்தி வருகிறார். மனைவி தமயந்தி. மகன் கந்தகார்த்திக் பி.இ. மற்றும் எம்.இ. பட்டங்கள் பெற்றுள்ளார். மகள் செல்லகிருத்திகா கல்லூரியில் படிக்கிறார். கொங்குச் சமுதாய வளர்ச்சியில் தீவிர அக்கறை கொண்ட இவர் ஆறாவது முறையாகச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.

திரு. **வி.பி.செங்கோட்டுவேல்**

ஈரோட்டிற்கு அருகில் உள்ள வட்டக்கல் வலசில் பிறந்தவர், பொருள்தந்த கூட்டத்தைச் சேர்ந்தவர். 1987 ஆம் ஆண்டு முதல் சென்னை உயர்நீதி மன்றத்தில்



வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிறார். தமிழக அரசு வழக்கறிஞராகவும், மத்திய அரசு வழக்குரைஞராகவும் பணிபுரிந்துள்ளார். இவரது மனைவி திருமதி. பாரதி செங்கோட்டுவேல் கட்டிடங்கள் வடிவமைப்பவர் (Architect). கொங்கு வெள்ளிவிழா கட்டிடத்தையும், தீரன் சின்னமலை மாளிகையையும் இலவசமாக வடிவமைத்து சமுதாயப் பணியாற்றியவர். இவர்களுக்கு அமிர்தா, ரம்யா என இரண்டு மகள்கள். கல்லூரியில் படிக்கிறார்கள். நான்காவது முறை செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.

திரு. **பி.கே.ஈஸ்வரமூர்த்தி**

கோவை மாவட்டம் பல்லடம் வட்டம் பனப்பாளையம் கிராமத்தில் பிறந்த இவர் காடைக் கூட்டத்தைச் சேர்ந்தவர். 51 வயது நிரம்பிய இவர் B.Sc., மற்றும் PGDBM



பட்டங்களைப் பெற்றுள்ளார். சென்னையில் பொறியியல் தொழிற்சாலை நடத்தி வருகிறார். Precision Equipment (Chennai) Pvt. Ltd., என்கிற இவரது நிறுவனம் சென்னை பெருங்குடியில் அமைந்துள்ளது. இவரது மனைவி திருமதி வசந்தனா மணி. மகள் செல்வி சஞ்சனா பி.இ. பட்டதாரி. மகன் செல்வன் அருண்முகிலன் கல்லூரியிலும் படித்து வருகிறார். கொங்குச் சமுதாய வளர்ச்சிக்கு சீரிய பணிகளை மேற்கொண்டவர். மூன்றாவது முறையாக செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றிருக்கும் இவர் முன்னாள் சங்கத்தலைவர் திரு கே.பாலசுப்பிரமணியன் அவர்களின் இளைய சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. **ஆர்.சண்முகவேல்**

நாமக்கல் மாவட்டம் சர்க்கரைக்காட்டில் பிறந்த இவர் விளையன் கூட்டத்தைச்



சேர்ந்தவர். பி.காம் பட்டதாரியான இவர் சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் சன்பிரைட் குரூப் ஆப் கம்பெனிஸ் என்ற பெயரில் இவரது சகோதரர் ஆர்.கணேசனுடன் இணைந்து கம்ப்யூட்டர் எம்பிராய்டரி, டிசைன்ஸ், எக்ஸ்போர்ட் ரெடிமேட் ஆடைகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளார். **1996** ஆம் ஆண்டு சிறிய அளவில் தொடங்கிய நிறுவனத்தைக் கடின உழைப்பாலும், திறமையாலும் ஆல்போல்தழைத்து வளரச்செய்தவர். இவருடைய துடிப்பான செயலாற்றலும், சமுதாய ஈடுபாடும் வியக்கத்தக்கவை. இவருடைய மனைவி திருமதி சோபிலா. மகள் பூர்வர்ஷா, மகன் மோனிஷ். பள்ளியில் படிக்கின்றனர். தற்போது **6** முறையாக செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.

திரு. **எம்.கார்த்திக்**

நாமக்கல் NSIT பெரியவர் கொங்குமாமணி திரு.எம்.முருகேசன் – திருமதி தனம்



தம்பதியரின் புதல்வரான இவருக்கு வயது **34**. காடைக்கூட்டத்தைச் சேர்ந்த இவர் பொறியியல் பட்டம் பெற்ற பின்னர், இங்கிலாந்தில் MBA படித்தவர். ABK எனும் ஜப்பானிய நிறுவனத்தின் மூலம் ஜப்பானுக்குச்சென்று தொழில்முறை சிறப்புப் பயிற்சி பெற்றவர். குடும்பத் தொழிலான லாரி போக்குவரத்துத் தொழிலை சென்னையிலும், பெங்களூரிலும் நடத்தி வருகிறார். ஜப்பானில் எடுத்த பயிற்சியின் காரணமாகவும், தொழிலில் புரட்சிகரமான முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தையிலும் Ready

Made Concrete வண்டிகள் தொழிலில் ஈடுபட்டு வெற்றிகரமாகவும், மிகச்சிறப்பாகவும் நடத்தி வருகிறார். RMC வண்டிகள் 200க்கும் மேற்பட்டவைகளை நிர்வகித்து, அகில இந்திய அளவில் L & T போன்ற பெரிய நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் கொடுத்து வருகிறார். சமுதாயத்தின் மேல் ஆழ்ந்த பற்று கொண்டவர். கடந்த பத்து ஆண்டுகளாக செயற்குழு உறுப்பினராகச் சமுதாயத் தொண்டாற்றி வருகிறார். மனைவி மாளவிகா. நியந்திரா, பிரையுத்தா என்ற இரண்டு மகள்கள் உள்ளன.

திரு. **வி.பி.வீரப்பன்**



நாமக்கல்லில் 1950 ஆம் ஆண்டு பிறந்த இவர் முத்தம் கூட்டத்தைச் சேர்ந்தவர் சென்னையில் பல ஆண்டுகளாக தொழில் நடத்தி வருகிறார். இவருக்கு லீலா என்ற மனைவியிம், கவிதா, ரேவதி என்ற இரண்டு மகள்களும் உள்ளனர். கொங்குச் சமுதாய வளர்ச்சிப் பணிகளில் தீவிர ஆர்வம் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். மூன்றாம் முறையாக செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.


திரு. **ஆர்.இளங்கோ**



கரூர் மாவட்டம் வாங்கபாளையம் கிராமத்தைச் சேர்ந்த அமரர் ஈ.இராமசாமி – திருமதி பார்வதி தம்பதியினரின் மகனான இவர் கீரம்பூர் பண்ணைக் குலத்தைச் சார்ந்தவர். 43 வயதான இவருக்கு மோகன காந்தி என்ற மனைவியும், நிவேதா, சுவேதா என்ற இருமகள்களும் உள்ளனர். மூத்த மகள் நிவேதா B.C.A. பட்டப்படிப்பும் (மூன்றாம் ஆண்டும்), இளைய மகள் சுவேதாஶ்ரீ எட்டாம் வகுப்பும் படித்து வருகின்றனர். கடந்த 30 ஆண்டுகளாக கரூரில் லாரி போக்குவரத்துத் தொழிலை சிறப்பாகச் செய்து வருகிறார். கரூர் கொங்கு இளைஞர் அணியில் தீவிரமாகப் பணியாற்றியவர். கோவை செழியன் அவர்களின் அன்பைப் பெற்றவர். கரூர், சென்னை, கோவை, திருப்பூர் ஆகிய நகரங்களில் நடந்த கொங்கு மாநாடுகளில் பங்கு கொண்டு சிறப்பாகப் பணியாற்றியவர். நான்காவது முறையாக செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.


திரு. **பி.ரவி**

திருச்செங்கோட்டைச் சேர்ந்த இவர் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் டிப்ளமோ பெற்றவர். காடைக் கூட்டத்தை சேர்ந்தவர். திருச்செங்கோடு கொங்கு வேளாளர் இளைஞர்



சங்கத்தின் தலைவராகப் பத்து ஆண்டுகளாகவும், ரிக் உரிமையாளர் சங்கத் துணைத்தலைவராக ஒன்பது ஆண்டுகளாகவும் இருந்து வருகிறார். இவர் திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தனாரீஸ்வரர் திருக்கோயிலில் அறங்காவளர் குழு தலைவராக இருந்து வருகிறார். இவர் திருச்செங்கோட்டில் போர்வெல் மற்றும் டிரான்ஸ்போர்ட் தொழிலைச் செய்து வருகிறார். இவரது மனைவி திருமதி ஆர்.ஜெயந்தி. மதுரிதா என்னும் மகள் படித்து வருகிறார். நான்காவது முறையாக செயற்குழு உறுப்பினராக பொறுப்பேற்றுள்ளார்.

திரு. **பி.அருள்**



கோவை மாவட்டம் அன்னூரைச் சேர்ந்த திரு.கே.பொன்னுசாமி அவர்களின் மகனான இவர் காடைக்கூட்டத்தைச் சேர்ந்தவர். இவருடைய குல தெய்வம் செல்வநாயக அம்மன். B.E., மற்றும் MBA பட்டங்கள் பெற்றுள்ள இவர், சென்னை ஈக்காட்டுத்தாங்கலில் பொன்மணி இஞ்சினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற வாகன உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் நிறுவனத்தை நடத்தி வருகிறார்.


கொங்குச் சமுதாயப்பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். முன்னாள் சங்கத்தலைவர் கே.பாலசுப்பிரமணியன் அவர்களின் நிறுவனத்தில் பணியாற்றியபோது, கொங்குநாடு இல்லக்கட்டடப்பணியில் பங்கு கொண்டவர். அன்னூரில் கொங்கு இளைஞர் சங்கம் அமைத்ததில் முக்கியப் பங்கு பெற்றவர். இரண்டாவது முறையாக செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.

திரு. **வீ.ஆர்.பாலசுப்பிரமணியன்**



வயது **41**, ஆந்தை கூட்டம். ஈரோடு மாவட்டம், சத்தி வட்டம், பவானிசாகர் ஒன்றியத்தில் உள்ள வெள்ளாள பாளையம் கிராமத்தில் வசித்து வரும் திரு. ஆர்.இராமசாமிகவுண்டர்–திருமதி. ஆர்.மாராத்தாள் ஆகியோரின் மகனாவார் இவர். வக்கீல் படிப்பை முடித்துள்ள இவர் சென்னை இசை குழும நிறுவனங்களின் (Easi Group of companies) இயக்குநராக உள்ளார். இவர் Tax, Legal, HR & Labour Consultant ஆக பணிபுரிந்து வருகிறார். இவருக்கு பி.தமிழ்செல்வி பி.காம்., என்கிற மனைவியும், பி.சர்நிதா என்கிற (9வயது) மகளும், பி.எஸ்.மிருதுவர்ஷினி என்கின்ற (5வயது) மகளும் இருக்கிறார்கள். முதன் முறையாக செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. **அமராபதி**



தூரன் கூட்டத்தை சார்ந்த இவர் திருப்பூர் மாவட்டம் அவிநாசியைப் பூர்விகமாகக் கொண்டவர். பி.ஏ. பட்டம் பெற்றவர். ஏறத்தாழ பதினான்கு வருடங்களுக்கு மேலாக கிண்டி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் ஜெய்ராம் ஹைடெக் ப்ராடக்ட்ஸ் என்ற தொழில் நிறுவனத்தை நடத்தி வருகிறார். இந்நிறுவனமானது கனரக இயந்திரங்களுக்கு உதிரி பாகங்களைத் தயாரித்து வருகிறது. இவரது தந்தை கே.மருதாச்சலம் அவர்கள் அவிநாசியில் பிரபல வழக்கறிஞராவார்.இவரது தாயார் திருமதி ருக்மணி. இவருக்கு பி.உமாமகேஷ்வரி எம்.எஸ்.சி. என்கிற மனைவியும், தன்வி என்கிற நான்கு வயது மகளும் இருக்கிறார்கள். முதன்முறையாக செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## திருமணமாலை

### திருமணத்தகவல் மையம், சென்னை
### மறுமணத்திற்கு மணமகன் தேவை

செல்லன் கூட்டம், வயது 29, படிப்பு M.A., M.Phil., கோவை கல்லூரியில் விரிவுரையாளர், உயரம் 5'2'' - நல்ல சிகப்பு, அசுபதி நட்சத்திரம் – 12ல் செவ்வாய், உடன்பிறப்பு 1 அண்ணன், 1 அக்கா. விவாகரத்தான மேற்படி பெண்ணுக்கு, படித்த, தகுதியான மணமகன் தேவை.

தொடர்புக்கு :

**டி.கே.சுப்ரமணியன்**

60, மேகசின்சாலை, (பட்ரோடு). (கன்டோன்மென்ட் மருத்துவமனை எதிரில்)

பரங்கிமலை, சென்னை – 600 016

தொ.பே. : 044–22311411, 9840364348

❖ ❖ ❖ ❖ ❖

# சங்கத் தலைவர் திரு.பரணி பாலு அவர்கள் தமிழக முதல்வருடன் சந்திப்பு

13–10–2010 அன்று தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் தலைமையில் 27 சமுதாய அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் முதல்வர் கலைஞர் அவர்களை சந்தித்தனர்.

முதல்வர் அலுவலகத்தில் இருந்து வந்த அழைப்பை ஏற்று சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தலைவர் திரு. பரணி கே.பாலசுப்பிரமணி அவர்கள் மற்ற சமுதாயத் தலைவர்களுடன் சேர்ந்து முதல்வருடனான இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

சமீபத்தில் உச்சநீதிமன்ற தீர்ப்பையொட்டி தமிழகத்தில் 69 சதவீத இடஒதுக்கீட்டுக்கு எந்தக் குந்தகமும் ஏற்பட்டு விடக்கூடாதென்ற நோக்கத்துடன், தமிழகத்தில் ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை முதல்வரிடம் வலியுறுத்தப்பட்டது அனைத்து நிர்வாகிகளும் கையெழுத்திட்ட கோரிக்கை மனு முதல்வரிடம் கொடுக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட 27 சமுதாயங்களில், கொங்குச் சமுதாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததோடு, சங்கத்தலைவரை முன்வரிசையில் முதல்வரின் எதிரில் அமரவைத்து அவரது கருத்தைக் கூர்ந்து கேட்டது கொங்குச் சமுதாயத்திற்கு உள்ள மதிப்பையும் மரியாதையையும் காட்டுவதாக அமைந்தது.

தமிழகத்தில் இருக்கும் 69 சதவீத இடஒதுக்கீடு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, 2011 ஆண்டு ஜீன் மாதத்திற்குள் கணக்கெடுப்பை எடுத்து முடிக்க வேண்டும். ஜாதிவாரி கணக்கெடுப்பை முடித்து, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் சமுதாயங்களைச் சேர்ந்த மக்கள் தொகை 69 சதவீதத்திற்கு மேல் உள்ளது என்று ஆதாரத்துடன் நிரூபித்தால்தான், இந்த ஒதுக்கீடு தொடர வழியுண்டு, எனவேதான் ஜாதிவாரி கணக்கெடுப்பை உடனே தமிழகத்தில் நடத்தவேண்டியது மிகவும் அவசியம் என்பதால் முதல்வரிடம் இக்கோரிக்கை வைக்கப்பட்டது.

சந்திப்பு மிகவும் சுமூகமாக இருந்தது. முதல்வரிடம் கொடுத்த மனுவில் எப்படி, எந்த வகையில், எந்த நேரத்தில் ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது. அதைப் படித்துப் பார்த்த முதல்வர், “ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டுமென்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. இதை நானும் தொடர்ந்து சொல்லி வருகிறேன். அந்த வகையில் தமிழக பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவர் நீதிபதி ஜனார்த்தனத்தை வரவழைத்து, அதுபற்றி அவரிடம் பேசி, ஒரு நல்ல முடிவை எடுக்கிறேன்” என்று உறுதியளித்தார்.

❖ ❖ ❖ ❖ ❖

# வாழ்த்துகிறோம்



திண்டுக்கல் மாவட்டம், ஆர்.எம்.நகரைச் சேர்ந்த திரு.கே.ஆர்.தங்கராஜ் அவர்கள் மணியன் கூட்டத்தைச் சேர்ந்தவர். சமுதாய உணர்வும் பற்றும் கொண்டவர். திரு. கே.ஆர்.தங்கராஜ் அவர்கள் திண்டுக்கல் மாவட்ட சிறு தொழில் சங்கத்தின் தலைவராக மிகச்சிறப்பாகச் செயலாற்றியுள்ளார்.

TANSTIA-Tamilnadu Small and Tiny Industries Association அமைப்பானது தமிழக அளவில் உள்ள அனைத்து மாவட்ட சிறுதொழில் அமைப்புகளின் தலைமை அமைப்பாகும். 1956 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழக அளவிலான சிறு மற்றும் குறுந்தொழில் கூட்டமைப்பில் தனி நபர் மட்டுமல்லாது நூற்றுக்கும் மேற்பட்ட சிறுதொழில் சங்கங்கள் உறுப்பினர்களாக உள்ளன.

TANSTIA அமைப்பானது மாநிலத்தில் உள்ள பல்வேறு சிறு மற்றும் குறுந்தொழில்களின் பிரச்சனைகளை மாநில மற்றும் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று தீர்வு காணும் வலிமை பெற்றது.

இந்த அமைப்பின் தலைவராக நமது சமுதாயத்தைச் சேர்ந்த திரு.கே.ஆர்.தங்கராஜ் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

திரு.கே.ஆர்.டி. அவர்களின் மனைவி திருமதி காந்திமதி. இரண்டு மகள்கள் உள்ளனர். இருவரும் திருமணமானவர்கள். மூத்த மகள் திருமதி நந்தினி. இவரது கணவர் திரு. வெங்கடேஷ்வரன் இவர் சென்னையில் Associated Transformers என்ற கம்பெனியின் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார். இளைய மகள் திருமதி சரயூ. இவரது கணவர் திரு. ராமகிருஷ்ணன், அமராவதி சர்க்கரை ஆலையில் சிறப்பு அலுவலராகப் பணியாற்றி வருகிறார்.

TANSTIA அமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு.கே.ஆர்.தங்கராஜ் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

# வாழ்த்துச் செய்திகள்

**கொங்கு நாடு அறக்கட்டளையின் வாழ்த்துச் செய்தி**

உயர்திரு **பரணி கே.பாலசுப்பிரமணி** அவர்களுக்கு வணக்கம்.

தாங்கள் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவராகப் பொறுப்பேற்ற செய்தி அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

கொங்கு நாடு அறக்கட்டளையின் தலைவர் மற்றும் அறங்காவலர்கள் சார்பாக, தங்களுக்கும், நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்க வளமுடன்
கொங்கு நாடு அறக்கட்டளைக்காக
டி.கே.சுப்ரமணியன், செயலாளர்

❖❖❖❖❖

**சக்தி மசாலா நிறுவனத்தின் வாழ்த்துச் செய்தி**

பெறுநர்

திரு.**கே.பாலசுப்பிரமணி** அவர்கள்
தலைவர்,
கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை – 600 014.

அன்புடையீர், வணக்கம் !

கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 2010–2012 ஆம் ஆண்டிற்கான சங்க நிர்வாகிகள் தேர்தலில் தாங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை அறிந்து அகம் மகிழ்ந்தோம். தங்களோடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள துணைத் தலைவர்கள், செயலாளர், இணைச்செயலாளர்கள், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துக்கள். தங்கள் தலைமையில் சங்கம் சிறப்பாக செயல்பட்டு கொங்கு சமுதாயம் பயன்பெறும் வகையில் தாங்கள் பல அரிய சேவைகளைப் புரிய சக்தி மசாலா நிறுவனங்களின் சார்பாகவும், எங்களின் சார்பாகவும் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புடன்,
சக்தி மசாலா (பி) லிமிடெட்டுக்காக

| | |
|---|---|
| பி.சி.துரைசாமி<br>மேலாண்மை இயக்குநர் | டாக்டர். சாந்தி துரைசாமி<br>இயக்குநர் |

❖❖❖❖❖

**கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பின் வாழ்த்துச் செய்தி**

பெறுநர்

உயர்திரு. **கே.பாலசுப்பிரமணி** அவர்கள்
தலைவர், கொங்கு
நண்பர்கள் சங்கம், சென்னை

அன்புடையீர் வணக்கம் !

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 2010–2012 அம் ஆண்டிற்கான சங்க நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.கே.பாலசுப்பிரமணி அவர்கள் |
| துணைத்தலைவர் I | : | திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்கள் |
| துணைத்தலைவர் II | : | திரு. பி.சென்னியப்பன் அவர்கள் |
| செயலாளர் | : | திரு. ஆர்.செல்வராஜ் அவர்கள் |
| இணைச்செயலாளர் I | : | திரு. எஸ்.ஆர்.ராஜேந்திரன் அவர்கள் |
| இணைச்செயலாளர் II | : | டாக்டர். கே.ஆர்.பி.சண்முகம் அவர்கள் |
| பொருளாளர் | : | திரு.கே.கே.ரமேஷ் அவர்கள் |
| | | செயற்குழு உறுப்பினர்கள் |

அனைவரும் போட்டியின்றி ஏகமனதாக தேர்வு பெற்றமைக்கு கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பு சார்பாக உளமார இனியவாழ்த்துக்களை மனமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி !

என்றும் கொங்குச் சமுதாயப் சேவைப் பணியில்
பி.டி.ராஜமாணிக்கம். பொதுச்செயலாளர்

❖❖❖❖❖

**நாமக்கல் கொங்கு நண்பர்கள் சங்கம் – வாழ்த்துச் செய்தி**

பெறுநர்

உயர்திரு. **கே.பாலசுப்பிரமணி** அவர்கள்
தலைவர், கொங்கு
நண்பர்கள் சங்கம், சென்னை

அன்புடையீர்,

வணக்கம், இப்பவும் வருகின்ற 2010–2012 ஆம் ஆண்டிற்கான சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டமைக்கு எங்களுடைய நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், தங்களோடு பொறுப்பேற்கும் ஏனைய நிர்வாகிகளுக்கும், நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் எங்களது வாழ்துதுக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

தங்களின் சேவைக்கு எங்களால் ஆன அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி !

இப்படிக்கு
கே.எல்.எஸ். நல்லதம்பி, தலைவர்


❖❖❖❖❖

## நன்றி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 2010–2012 ஆண்டிற்கான நிர்வாகிகள் அனைவரும் ஏகமனதாகத் தேர்வு பெற்றமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ள கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் திரு.பி.டி.இரஜாமணிக்கம் அவர்களுக்கும், ஈரோடு சக்தி மசாலா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பி.சி. துரைசாமி மற்றும் இயக்குநர் டாக்டர் சாந்தி துரைசாமி அவர்களுக்கும், கொங்கு நாடு அறக்கட்டளை செயலாளர் திரு.டி.கே.சுப்ரமணியன் அவர்களுக்கும், நாமக்கல் கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவர் திரு.கே.எல்.எஸ்.நல்லதம்பி அவர்களுக்கும், மேற்கண்ட அமைப்புகளுக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பில் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பரணி கே.பாலசுப்பிரமணி
தலைவர்

## வாழ்த்துகிறோம்



கோபிவட்டம், அய்யம்பாளையம் திரு. நடராசகவுண்டர் மகன் டாக்டர். சச்சிதானந்தன் (உறுப்பினர் எண். 25) அவர்கள், அகில இந்திய நகரமைப்பாளர்கள் அமைப்பின் (Institute of Townplanners, India) தலைவராக 2010–2011 ஆண்டிற்கு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தமிழகத்திலிருந்து இரண்டாவது முறையாகத் தலைவர் பதவிக்குத் தேந்தெடுக்கப்பட்டவர் என்ற பெருமையைப் பெறுகிறார்.அண்ணா பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை மற்றும் நகரமைப்புக் கல்லூரியின் முன்னாள் இயக்குநரான இவர் கொங்கு சாதனையாளர் விருது பெற்றவர்.


தமிழக அரசின் டாக்டர் இராதாகிருட்டிணன் நல்லாசிரியர் விருதை 1997ம் ஆண்டு பெற்றவர்.

அந்தியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் படித்த பின்னர், கட்டிடக்கலை மற்றும் நகரமைப்புத் துறைகளில் முதுகலை பட்டம் மற்றும் முனைவர் பட்டம் பெற்றவர்.

தற்போது இவர் சென்னை MEASI College of Architecture, ல் Dean ஆகப் பணியாற்றி வருகிறார்.

ITPI அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டாக்டர். சச்சிதானந்தம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

## வாழ்த்துகிறோம்



சென்னை கிண்டியில் வசித்துவரும் திரு. சி.சுரேஷ் – டாக்டர் எஸ்.விஜயா தம்பதியரின் 11வயது மகள் எஸ்.தனுஷ். இவர் ஆதம்பாக்கம் DAV பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்து வருகிறார்.

இவர் ஒரு சிறந்த நீச்சல் வீரனாகத் திகழ்கிறார். சென்னை வேளச்சேரியில் உள்ள "Chennai Aquatic Club ல் உறுப்பினராகச் சேர்ந்து கடந்த நான்கு ஆண்டுகளாக திரு.கந்தசாமி என்ற பயிற்சியாளரிடம் நீச்சல் பயிற்சி பெற்றுள்ளார்.

பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு 2006 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 105 (நூற்று ஐந்து) பதக்கங்கள் பெற்று மாபெரும் சாதனை நிகழ்த்தியிருக்கிறார். இதில் 6 பதக்கம் தேசிய அளவிளான போட்டிகயில் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் நடந்த "National Sub Junior Aquatic Championship போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசைப் பெற்றதோடு, தேசிய அளவில் புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கும் குறிப்பாக கொங்குச் சமுதாயத்திற்கும் பெரும் பெருமை சேர்த்திருக்கும் செல்வன் தனுஷ்–க்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. செல்வன் தனுஷ் மேன்மேலும் சாதனைகள் படைக்க சங்கம் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, அவருடைய பெற்றோரையும் சங்கம் மகிழ்ந்து பாராட்டுகிறது.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



கரூர் மாவட்டம் தென்னிலை கிராமம் கூனம்பட்டியைச் சேர்ந்தவரும், கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை கரூர் மாவட்டத் துணைத் தலைவருமான கொங்குநாடு முத்துசாமி அவர்களை, மேச்சேரி இனபெட்டை ஆடு வளர்ப்பில் சிறப்பிடம் பெற்றவராக, தமிழ்நாடு கால் நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தேர்ந்தெடுத்துள்ளது. முதல் பரிசாக ரூ. 2000/– மற்றும் சான்றிதழ் தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்களால் வழங்கப்பட்டது. அமைச்சர் மாண்புமிகு பொங்களூர் பழனிசாமி வாழ்த்துரை வழங்கினார்.

கொங்குச் சமுதாய வளர்ச்சிக்கு பாடுபட்டு வருவதோடு, கால்நடை பல்கலைக்கழகத்தின் பரிசையும், பாராட்டையும் பெற்ற கொங்கு நாடு முத்துசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்

ஈடு இணையற்ற வீரர் !

முத்தையா முரளிதரன்

1972 ல் இலங்கை கண்டியில் திரு.முத்தையா – திருமதி லட்சுமி தம்பதியினருக்கு மூத்த மகனாகப் பிறந்த முத்தையா முரளிதரன் உலகின் தலைசிறந்த கிரிக்கெட் விளையாட்டு வீரர்களில் ஒருவராகப் போற்றப்படுபவர். பந்து வீசுவதில் ஈடு இணையற்ற மகாவீரராகத் திகழும் அவர் 800 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். இனியொருவர் முரளிதரனுடைய பந்து வீச்சுச் சாதனையை முறியடிக்க முடியாது என்பது நிபுணர்கள் கருத்து. தூரன் கூட்டத்தைச் சேர்ந்த முரளிதரனின் பூர்வீகம் நாமக்கல் பரமத்தி வேலூர் அருகில் உள்ள சருகலை என்ற கிராமம் ஆகும். அவருடைய பாட்டனார் காலத்தில் இலங்கையில் குடியேறினார்கள்.



முரளிதரனுக்கு மூன்று சகோதரர்கள் உள்ளனர். பிஸ்கட் தயாரிக்கும் தொழில் செய்து வருகின்றனர். கொங்கு நாட்டு வேளாண் குடியில் பிறந்த அவர் கொங்கு நாட்டிற்கும், தமிழ் இனத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். இவருடைய மனைவி திருமதி மதிமலர் சென்னை மலர் மருத்துவமனையில் முன்னாள் தலைவர் டாக்டர் இராம மூர்த்தி அவர்களின் மகளாவார். இலங்கை குடிமகனாக இருக்கும் இவர் தமிழகத்தின் மருமகன் என்பதும், IPL போட்டிகளில் சென்னை சூப்பர் கிங்க்ஸ் அணிக்காக விளையாடி தமிழக கிரிக்கெட் ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முரளிதரன் – மதிமலர் தம்பதியினருக்கு ஒரு மகன் உள்ளார். வாய்ப்பு கிடைத்தால் எல்லாத் துறைகளிலும், கொங்கு வேளாண் குடியினர் உலக சாதனை படைக்க முடியும் என்பதற்கு முத்தையா முரளிதரன் ஒரு சான்று. எளிய குடும்பத்தில் பிறந்து, லட்சியம், அயரா உழைப்பு, கடும் பயிற்சி, தன்னம்பிக்கை கொண்டு மாபெரும் சாதனை படைத்துள்ள முத்தையா முரளிதரன் அவர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்தி பாராட்டுவதில் பெருமகிழ்வு கொள்கிறது.

❖❖❖❖❖

# மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | A. அமுதா |
| பிறந்த தேதி | : | 17-07-1978 - 11.15 p.m. |
| நட்சத்திரம் | : | கேட்டை பாதம் 4 |
| இராசி | : | விருச்சிகம் |
| இலக்கினம் | : | மீனம் |
| தந்தை | : | எம்.அய்யாவு |
| தாயார் | : | அ.அத்தாயி |
| சொந்த ஊர் | : | கள்ளக்குறிச்சி |
| உயரம் | : | 157 cms |
| கல்வி | : | MCA |
| தொழில் | : | Wipro Technologies, Chennai |
| சம்பளம் | : | ரூ. 50,000 PM |
| குலம் | : | ஆந்தை குலம், மாணிக்கம் பாளையம் அண்ணமார்கோவில் |
| தேவை | : | Any degree / IT or Non IT (Own Business) சொந்த தொழில் |
| போன் | : | 9994284281, 9976245764, 9976972904 |

| | | | |
|---|---|---|---|
| லக்<br>கேது | | | குரு |
| மாந் | ராசி | | சூரி<br>புத |
| | | | செவ்<br>சுக்<br>சனி |
| | சந் | | ராகு |


| | | | |
|---|---|---|---|
| சந்<br>புத | | குரு<br>சனி | |
| ராகு | நவாம்சம் | | சூரி<br>சுக் |
| | | | கேது |
| லக்<br>மாந் | செவ் | | |

# சாதனைகள் சாத்தியம்

சூழ்நிலைக் கைதியாக
இருந்தது போதும்
சூழ்நிலையைக் கைது செய்திடு !

சூழ்நிலையில் கரைந்தது போதும்
சூழ்நிலையைக் கடந்து செல்!

வரலாறுகளைப் படித்தது போதும்
வரலாறுகளைப் படைத்திடு!



உலக வரலாறு என்பது
சாதனையாளர்களின்
வாழ்க்கை வரலாறு!

உனது பிறந்தநாளை
உலகமே
கொண்டாடும் உழை!

செயல்களை
உனது நிகழ்காலமாக்கு !
கடந்தகாலமும் எதிர்காலமும்
கவுரவப்பட்டுக்கொள்ளும் !

தேடல்களுக்குள் தொலைந்து விடு
புதுமைகளின் விலாசமாகலாம்!

விமர்சனங்களைக் கடந்து போ
கடந்து விடு
வெற்றியின் திசை தெரியும் !

எதிர்பார்ப்புகளை எதிர்த்து நில்
ஏளனங்களை எருவாக்கு
எழுச்சியை மூச்சாக்கு
சாதனைகள் சாத்தியமாகும் !

சிந்தனைக் கவிஞர் டாக்டர். கவிதாசன்
தலைவர் – மனிதவள மேம்பாட்டுத்துறை,
ரூட்ஸ் நிறுவனங்கள், கணபதி, கோவை – 641 006

ஆளப்பிறந்தவன் அடிபணியமாட்டான்



கொங்கு நாடு செழித்தால் எந்நாடும் செழிக்கும்

## நம்மால் முடியும்

# கொங்கு திருமண தகவல் மையம்

**1/6**, சக்தி நிலா காம்ப்ளக்ஸ், NH-7, பைபாஸ் ரோடு,
வேலாயுதம்பாளையம் (அஞ்சல்) கரூர் Dt - 639 117
Ph : 7502617851 / 8883249714

'கொங்கு கவுண்டர் இனத்தில் வரன் வேண்டுவோர்கள் தொடர்பு கொள்க'

B.E., B.Tech., M.E., MTech., MCA., MBA., மற்றும் அனைத்து டிகிரி, MBBS., MD., MS., BDS., பட்டங்கள் பெற்றவர்கள், தொழில் அதிபர்கள், வசதி படைத்தவர்கள் ஆகியோரின் அனைத்து ஜாதகங்களும் உள்ளன. அரசாங்க வேலை, தனியார் வேலையில் உள்ளவர்களின் ஜாதகங்கள் உள்ளன. விவசாயம் சார்ந்த ஆண், பெண் ஜாதகங்கள், வக்கீல் B.L., ML., ஜாதகங்கள் உள்ளன. ஆண், பெண் மறுமணம் புரிய விரும்புவோருக்கு ஜாதகங்கள் உள்ளன.

❖❖❖❖❖